# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2024.07.19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## வாடகை (நீக்கல்)

**1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்**

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 12.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

ச.வ.-ஒ. 77/2023

## 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வாடகை (நீக்கற்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் (இச்சட்டத்தில், "இயைபான தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி இச்சட்டம் தொடர்பில் எந்தத் தேதியன்று சான்றிதழ் புறக்குறிப்பிடப்படுகின்றதோ அந்தத் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதல்

**2.** 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டமானது இத்தால் நீக்கப்படுகின்றது.

பேணல்களும் நிலைபெயர்கால ஏற்பாடுகளும்

**3.** இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினாலான (இப்பிரிவில், "நீக்கப்பட்ட சட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வாடகைச் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும்-

(அ) இயைபான தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதி ஒன்றுக்கு இயைபான தேதிக்கு உடன் முற்போந்த நாளன்று நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளினால் ஆளப்பட்ட எவையேனும் வளவுகளின் உடைமையில் இருக்கின்ற வாடகைக் குடியிருப்பாளர் ஒருவரை வெளியேற்றுவதற்காக வழக்கு எதுவும் தொடரப்படுதலாகாது;

(ஆ) இயைபான தேதிக்கு உடன்முற்போந்த நாளன்று நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளினால் ஆளப்பட்ட

எவையேனும் வளவுகளின் நிலக்கிழார் எவரும் இயைபான தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதி ஒன்றுக்கு நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் செலுத்தப்படற் பாலதான அதிகாரமளிக்கப்பட்ட வாடகையை விஞ்சிய ஏதேனும் வாடகையை கோருதலோ அல்லது பெறுதலோ ஆகாது;

(இ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியம் அல்லது கொள்ளப்பட்ட ஏதேனும் உரிமை அல்லது உரித்துடைமை இயைபான தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதி ஒன்றுக்கு வலிதாகவிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும்;

(ஈ) நீக்கப்பட்ட சட்டத்தின் 38 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் வாடகைச் சபையின் முன்னர் கோப்பிடப்பட்ட அல்லது தொடங்கப்பட்ட அத்துடன் இயைபான தேதியின் உடன்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ள அல்லது பூர்த்திசெய்யாதுள்ள ஏதேனும் விண்ணப்பம் அல்லது வழக்குநடவடிக்கை மேற்கொண்டு முன்னெடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இயைபான தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியினுள் நிறைவுசெய்யப்படுதலும் வேண்டும்;

(உ) நீக்கப்பட்ட சட்டத்தின் 40 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மீளாய்வுச் சபையின் முன்னர் கோப்பிடப்பட்ட அல்லது தொடங்கப்பட்ட அத்துடன் இயைபான தேதியின் உடன்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ள அல்லது பூர்த்திசெய்யாதுள்ள ஏதேனும் விண்ணப்பம் அல்லது வழக்குநடவடிக்கை மேற்கொண்டு முன்னெடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இயைபான தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியினுள் நிறைவுசெய்யப்படுதலும் வேண்டும்;

(ஊ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு ஆக்கப்பட்ட அத்துடன் இயைபான தேதியின் உடன்முற்போந்த நாளன்று அவருக்கு

முன்னர் முடிவுறாதுள்ள ஏதேனும் விண்ணப்பம் சொல்லப்பட்ட சட்டம் நீக்கப்பட்டிருக்கவில்லை என்றாற் போன்று மேற்கொண்டு முன்னெடுக்கப்படுதலும் நிறைவுசெய்யப்படுதலும் வேண்டும்;

(எ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட அத்துடன் இயைபான தேதியின் உடன் முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ள அல்லது பூர்த்தி செய்யாதுள்ள ஏதேனும் வழக்கு அல்லது வழக்குநடவடிக்கை அல்லது காரியம் அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அதே நிவாரணத்தை நாடுகின்ற புதிய வழக்கொன்றை கோப்பிடுவதற்கான சுதந்திரத்துடன் மீளப் பெறப்படலாம். அத்தகைய புதிய வழக்கு இயைபான தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதி ஒன்றினுள் கோப்பிடப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.